பதிவு எண் / REGISTER NUMBER :

அரசியல் அறிவியல் மாதிரி வினாத்தாள் - I (தொகுதி 1)

(மேல்நிலை பள்ளி முதலாம் ஆண்டு)

POLITICAL SCIENCE MODEL QUESTION PAPER –I (VOLUME 1)

HIGHER SECONDARY (FIRST YEAR)

தமிழ் மற்றும் ஆங்கில வழி / TAMIL & ENGLISH VERSION

நேரம் : 2.30 மணி
மதிப்பெண்கள்:90

Time: 2.30 hours **Marks: 90 marks**

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரி பார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions: (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the hall supervisor immediately.

(2) Use Blue or Black ink to write and underline and pencil to draw diagrams.

பிரிவு – I / Section – I

(20 x 1 = 20 Marks)

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note: (i) Answer all the questions.

(ii) Choose the most suitable answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

1. அரசு ஒரு நெறிமுறை அமைப்பு, மனிதனின் தார்மீக முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமானது என்று கூறியவர் யார்

அ) தனிமனிதத்துவ வாதிகள்

ஆ) அமைப்பெதிர்வாதிகள்

இ) கருத்தியல் வாதிகள்

ஈ) மார்க்சிய வாதிகள்

The statement that the state is an ethical institution which is indispensable for the full moral development of man is attributed to:

a) Individualists b) Anarchists
c) Idealists d) Marxists

2. **கீழே இரண்டு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்று கூற்று (கூ) எனவும் மற்றொன்று காரணம் (கா) எனவும் உள்ளது.**

கூற்று (கூ): அறிவியல் ரீதியான சோசியலிசம் வர்க போராட்டம் மூலமாக வரலாற்றை விவரிக்கின்றது.

காரணம் (கா): பாட்டாளி வர்க்கத்திற்கும் விவசாய வர்கத்திற்க்கும் இடையிலான முரண்பாடுகளின் விளைவாகவே வரலாற்றில் வர்கப் போராட்டம் நடக்கிறது.

[மேற்கண்ட கூற்றுகளின் அடிப்படையில் கீழ்கண்டவற்றில் எது சரியானது என்பதை கண்டுபிடிக்கவும்.]

குறீயிடு:

அ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

Assertion (A): Scientific socialism explains history in terms of class struggle.

Reason (R): Class struggle in history takes place as a result of contradictions between the proletariat and the peasantry.

In the context of the above two statements, which one of the following is correct?

Codes:

(a) Both A and R are true and R is the correct explanation of A
(b) Both A and R are true but R is not a correct explanation of A
(c) A is true but R is false

(d) A is false but R is true

3. தாராளவாதத்தின் மிக முக்கியமான கோட்பாடு என்ன?
அ) சமத்துவம் ஆ) சமூக நீதி
இ) சுதந்திரம் ஈ) மக்களாட்சி
The most essential principle of Liberalism is:
(a) Equality (b) Social justice
(a) Liberty (d) Democracy

4. **கீழே இரண்டு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்று கூற்று (கூ) எனவும் மற்றொன்று காரணம் (கா) எனவும் உள்ளது.**
கூற்று: சமூக இயக்கம் என்பது உறுப்பினர்களின் மனோபாவத்தினாலும் சமுதாயத்தின் சவால்களினாலும் ஊந்தப்பட்டு உருவாகின்ற ஒரு வகையான கூட்டு நடத்தை ஆகும்.
காரணம்: சமூக குழுக்களும் இயக்கங்களும் தன்னலக் குழுக்களையும் அரசியல் கட்சியையும் பயன்படுத்தி தங்களின் நோக்கங்களை நிறைவேற்றி கொள்கின்றன.
குறீயிடு:
அ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
Given below are two statements, one labelled as Assertion **(A**) and the other labelled as Reason **(R):**
Assertion (A): A social movement is a particular form of collective behaviour in which the motive to act springs from the attitude of members and the challenges of the society.
Reason (R): Social Groups and movements embrace interest groups and political parties to achieve their goals.
In the context of the above two statements, which one of the following is correct?
Codes:
(a) Both A and R are true and R is the correct explanation of A
(b) Both A and R are true but R is not the correct explanation of A
(c) A is true but R is false
(d) A is false but R is true

5. கீழ்கண்டவற்றில் தவறாக பொருத்தப்பட்ட ஜோடி எது?

அ) இயற்கை ஜான் லாக்

ஆ) சட்ட உரிமைகள்	தாமஸ் ஹாப்ஸ்
இ) வரலாற்று	ஜே.எஸ். மில்
ஈ) சமூக நல	ரோஸ்கோ பவுன்ட்

Which of the following is incorrectly paired.

a) Natural Rights - John Locke
b) Legal Rights - Thomas Hobbes
c) Historical Rights - J.S. Mill
d) Social Welfare Rights - Roscoe Pound

6. கீழ்க்கண்ட இயல்புகளில் இந்திய நாடாளுமன்ற முறை அரசாங்கம் செயல்பட அடிப்படையானவை யாவை?
அ) பெயரளவிலான மற்றும உண்மையான செயலாட்சி
ஆ) கிழவைக்குப் பொறுப்பான செயலாட்சி
இ) உண்மையான செயலாட்சியாக பிரதமர் இருத்தல்
ஈ) இவை அனைத்தும்

Which of the following are the features on the basis of which the parliamentary system of government in India operates?

(a) Nominal and real executives (b) Executive responsible to lower house
(c) Prime Minister is the real executive (d) All of the above

7. கட்சித் தாவலால் மக்களவை உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் யாரிடம் உள்ளது.

அ) சபாநாயகர்
ஆ) பிரதமர்
இ) குடியரசு தலைவர் (தேர்தல் ஆணையத்தின் கருத்துக்கு இணங்க)
ஈ) நாடாளுமன்ற செயலர்

Decision on defections about disqualification of the members of the Lok Sabha are made by the

a) Speaker
b) Prime Minister
c) President in accordance with the opinion of the Election Commission
d) Secretary to the Parliament

8. கீழே இரண்டு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்று கூற்று (கூ) எனவும் மற்றொன்று காரணம் (கா) எனவும் உள்ளது.
கூற்று: பொருளாதார ஏற்றத்தாழ்வு சவால்களை திறம்பட நிவர்த்தி செய்யும் ஆற்றல் இந்தியாவில் செயல்படும் நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கு இல்லை.
காரணம்: சுதந்திர இந்திய தலைமை சந்திக்கும் மிகப் பெரிய பிரச்சனை சாதிய

அடக்குமுறைகளும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுமே ஆகும்.

குறீயிடு:

அ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

Given below are two statements, one labelled as Assertion (A) and the other labelled as Reason (R):

Assertion (A): The parliamentary democratic system as adopted and operating in India is not capable of responding effectively to the challenge of economic inequalities.

Reason (R): The most explosive issues faced by India's post-independence leadership have been the problems of caste oppressions and socio-economic inequalities.

In the context of the above two statements, which one of the following is correct?

Codes:

(a) Both A and R are true and R is the correct explanation of A

(b) Both A and R are true but R is not the correct explanation of A

(c) A is true but R is false

(d) A is false but R is true

9. "தேசங்களின் செல்வம்" என்ற புத்தகத்தை எழுதியவர்.

அ) ஜான் ஸ்டுவர்ட் மில் ஆ) ஜெர்மி பெந்தம்

இ) ஆதம் ஸ்மித் ஈ) மேற்கண்டவை எதுவும் இல்லை

"Wealth of Nations" was written by"

(a) John Stuart Mill (b) Jeremy Bentham

(c) Adam Smith (d) None of these

10. கீழே இரண்டு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்று கூற்று (கூ) எனவும் மற்றொன்று காரணம் (கா) எனவும் உள்ளது.

கூற்று: இந்திய அரசு தற்பொழுது சந்திக்கும் மிகப் பெரிய சவால், அரசிற்கும், குடிமைச் சமூகத்திற்கும் இடையே மக்களாட்சி அமைப்பிற்கு உட்பட்டு சமத்துவத்தை அடைவதே ஆகும்.

காரணம்: அரசியல் குற்றவாளிகளின் ஆதிக்கம் அதிகரித்தல், அரசியல் ஊழல் மற்றும் மதக் கலவரங்கள் நமது நாட்டில் உயர்ந்த

விழுமியங்கள் சார்ந்த அரசியல் கலாச்சாரம் உருவாவதை தடுக்கின்றன.

குறீயிடு:

அ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

Given below are two statements, one labelled as Assertion (A) and the other labelled as Reason (R):

Assertion (A): The challenge that the Indian state is facing today is how to achieve equivalence between the state and the civil society within a democratic framework.

Reason (R): Criminalization of politics, political corruption and communal violence stand in the way of creating a value based political culture.

In the context of the above two statements, which one of the following is correct?

Codes:

(a) Both A and R are true and R is the correct explanation of A

(b) Both A and R are true but R is not the correct explanation of A

(c) A is true but R is false

(d) A is false but R is true

11. போர்கலை என்ற புத்தகத்தை எழுதியவர்

அ) மாவோ ஆ) மாக்கியவல்லி

இ) லெனின் ஈ) லாஸ்கி

The Art of war is written by:

a) Mao b) Machiavelli

c) Lenin d) Laski

12. "நிலப்பரப்பின் மிதான இறையாண்மை அல்லது அரசின் இறையாண்மை என்பது அதன் எல்லைக்குட்பட்ட பகுதி அனைத்திற்கும், வெளிநாடுகளின் கட்டப்பாட்டிலிருந்து முழுமையான சுதந்திரம் அடைவது என்பதே நவீன அரசுகளில் வாழ்வின் அடிப்படைக் கொள்கையாகும்'' என்று கூறியவர்

அ) எலியட் ஆ) போடின்

இ) ஆஸ்டின் ஈ) மாக்கியவல்லி

" Territorial Sovereignty or the superiority of State, Overall within its boundaries and complete freedom from external control has been a fundamental principles of the modern Sate life' is stated by

a) Elliot b) Bodin

c) Austin d) Machiavelli

13. கீழ்கண்டவற்றில் சரியாக பொருத்தப்பட்ட ஜோடி எது?

1. மனித கவுரவம் - தாராளவாதம்
2. சட்டத்தின் ஆட்சி - பாசிசம்
3. அரசில்லா சமூகம் - அமைப்பெதிர் வாதம்
4. கடுமையான அரசு கட்டுபாடு - முற்றதிகார ஆட்சி

அ) 1, 2, 3 மற்றும் 4 ஆ) 1, 3 மற்றும் 4

இ) 2 மற்றும் 3 ஈ) 1 மற்றும் 4

Which of the following pairs are correctly matched?

1. Human dignity - Liberalism
2. Rule of law - Fascism
3. Stateless Society - Anarchism
4. Rigid state control - Totalitarianism

(a) 1, 2, 3 and 4 (b) l, 3 and 4

(c) 2 and 3 (d) 1 and 4

14. மக்களாட்சியின் எந்த கோட்பாடு முதலாளித்துவத்தின் வீழ்ச்சியை ஆதரித்து புரட்சிகர சமூக மாற்றத்திற்ககு அறை கூவல் விடுத்தது.

அ) தொன்மை கோட்பா டு ஆ) மார்க்சிய கோட்பாடு

இ) சமத்தவ கோட்பாடு ஈ) உயர்ந்தோர் குழாம்

Which was the theory of Democracy favoured the collapse of capitalism and calls for the revolutionary transformation of the society?

(a) Classical Theory (b) The Marxist theory

(c) Egalitarian theory (d) The Elitist Theory

15. அரசு என்ற ஒன்றே இருக்க கூடாது என செயல்பட்டவர்கள்

5. அ) பாசிச வாதிகள் ஆ) அமைப்பெதிர் வாதிகள்

இ) சமதர்மவாதிகள் ஈ) இவற்றில் எவரும் இல்லை

Those who are active against the very existence of state are known as:

(a) Fascists (b) Anarchists

(c) Socialists (d) None of these

16. கீழே இரண்டு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்று கூற்று (கூ) எனவும் மற்றொன்று காரணம் (கா) எனவும் உள்ளது.

கூற்று: காரல் மார்க்ஸ் ஒரு புரட்சியாளர் ஆவார்.

காரணம்: வரலாற்றை பற்றி காரல் மார்க்ஸ் கவலைப் படவில்லை.

குறீயிடு:

அ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவைகள் ஆகும். ஆனால் காரணம் கூற்றை சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

Assertion (A):Karl Marx was a revolutionary.

Reason (R): Karl Marx was not concerned about the processes of history.

Codes:

(A) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)

(B) Both (A) and (R) are true, but (R) is not the correct explanation of (A).

(C) (A) is true, but (R) is false.

(D) (A) is false, but (R) is true.

17. ஒற்றையாட்சி முறையின் கீழ்கண்டவற்றில் தவறான கூற்று எது?

அ) ஒற்றையாட்சி முறையில் ஒரு அரசும் ஒரு அரசாங்கம் மட்டுமே உள்ளன.

ஆ) மத்திய மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே அரசமைப்பு அதிகார பகிர்வு உள்ளது.

இ) உள்ளாட்சி அமைப்புகள் தங்களது அதிகாரம் மற்றும் தன்னாட்சியை மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெருகின்றன.

ஈ) ஒற்றையாட்சி முறை சிறிய நாடுகளுக்கு உகந்த்தாகவே உள்ளது.

Which one of the following is not a correct statement regarding Unitary System

a) In a Unitary system, there is one state and one government.
b) There is constitutional division of powers between the central and the local government
c) Local bodies derive their power and autonomy from the central government
d) Unitary system is particularly suited for small country

அ) ஜே.எஸ். மில் - ஒதுக்கி வைக்கப்பட்ட நிலை

ஆ) கார்ல் - நேர்மறை மற்றும் எதிர்மறை

இ) ஐ.பெர்லின் - பெண்களுக்கு சமத்துவம்

ஈ) ஜான் லாக் - சகிப்புத் தன்மை

Match the theorists with their ideas- Select the right pair

a) J.S Mill - Alienation
b) Karl Mark - Positive and Negative Liberty
c) I. Berlin - Equality for women
d) John Locke - Toleration

19. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனிக்கவும்.

குடிமை உரிமைகள்

1. அ) குடிமக்களுக்கு அவரது குடியுரிமையின் காரணமாக கிடைக்கின்றது.
2. ஆ) மனித உரிமைகளுடன் இடைப்பரிமாற்றப்படுகிறது.
3. இ) பாகுபாடுகளை குறைக்கின்றது.
4. ஈ) மொழி மற்றும் கலாச்சார உரிமைகளை நமக்கு வழங்குகின்றது.

மேற்கண்டவற்றில் சரியான வாக்கியம் எது?

அ) 1, 3 மற்றும் 4 ஆ) 1, 2 , 3 மற்றும் 4

இ) 2 மற்றும் 4 ஈ) 1 மற்றும் 3

Consider the following statements

Civil Rights

1. Belong to the citizen by virtue of his citizenship.
2. Are interchangeable with human rights.
3. Aim to minimize discrimination.
4. Give us the right to one's language and culture.

Which of the statement given above are correct?

a) 1,3 and 4 b) 1,2,4 and 4

c) 2 and 4 d) 1 and 3

20. 'அது சுதந்திரமாக இருப்பினும் முழுமையாகக் கண்ணீராலும், தொடரும் ஆபத்துக்களாலும் நிறைந்த நிலையாகும்' எனக் கூறியவர் யார்?

அ) ஜான்லாக் ஆ) ப தாமஸ்அக்வினாஸ்

இ) தாமஸ் ஹாப்ஸ் ஈ) மார்க்ஸ்

Who said " It was a condition which, however free, is full of tears, and continual dangers"?

b) John Locke b) St.Thomas Aquinas
d) Thomas Hobbes d) Marx

பிரிவு – II / Section – II

(7 x 2 = 14 Marks)

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 க்கு கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்.

Answer any seven questions in which the question number 30 is compulsory.

21. "அரசியல் அறிவியல்" என்பதை வரையறுக்கவும். மேலும் அதன் பொருளை விளக்கவும்?
Define the term 'Political Science'. Explain its meaning.

22. அரசின் அடிப்படை கூறுகளை வெளிக்கொனறவும். அரசினுடைய முக்கியதுவத்தை விவரிக்கவும்?
Bring out the essential elements of State. Describe its importance.

23. "மக்கள் நல அரசு" என்ற கருத்தாக்கத்தினை விளக்குக. அதன் நன்மைகள் பற்றி கூறு.
Explain the concept of "Welfare State". Bring out its advantages.

24. இறையாண்மையின் முக்கிய பண்புகள் யாவை?
What are the chief characteristics of Sovereignty?

25. தனியார் சட்டம் என்றால் என்ன? தனியார் சட்டம் மற்றும் பொது சட்டத்தினை வேறுபடுத்துக.
What is Private Law? Differentiate between Private Law and Public Law.

26. அரிஸ்டாட்டிலின் கூற்றுபிரகாரம் குடிமகன் என்பவர் யார்? அவர்களுடைய கடமைகள் என்ன.
According to Aristotle, who is a citizen? Bring out his duties.

27. மக்களாட்சியின் முக்கிய வகைகளைப் பட்டியலிடுக? இந்தியாவில் எந்த வகை மக்களாட்சியை பின்பற்றுகிறோம்?
List out the major types of Democracy. What type of democracy we follow in India?

28. மனிதனின் இயல்பு குறித்த ஹாப்பிஸ் கருத்துக்களை விளக்குக?
Explain the ideas of Hobbes on Human Nature

29. அரசாங்கத்தின் நோக்கத்தை விவரிக்கவும்? அரசையும், அரசாங்காத்தையும் வேறுப்படுத்திக் காட்டவும்?
Describe the purpose of government. Differentiate between state and government

30. **மாண்டெஸ்க்யூ** அரசாங்கத்தை பின்வருமாறு மூன்று விதமாக வகைப்படுத்துகிறார். இவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

அ. "இது ஒரு தனி மனிதனின் ஆட்சியாகும். அத்துடன் நிலையாக நிறுவப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்பெறுவது ஆகும்."
ஆ) "ஒரு தனிமனிதனின் விருப்பு, வெறுப்பிற்கு உட்பட்டே ஆளுகை நடைபெறும். மேலும் நிறுவப்பெற்ற மற்றும் நிலையான சட்டதிட்டங்கள் கிடையாது."
இ) "இவ்வகை அரசாங்கத்தில் மக்கள் இறையாண்மை அதிகாரத்தை பெற்றுள்ளனர்."

Identify the following three-fold division of government proposed by Montesque and name them.

a. "Rule by one single person and governed by fixed and established law."
b. "Rule by one single person but there is no fixed rule for governance, everything conducted by his will."
c. "People possess sovereign power"

பிரிவு – III / Section – III

(7 x 3 = 21 Marks)

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 க்கு கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்.

Answer any seven questions in which the question number 40 is compulsory.

31. அ) முன்னணி பல்கலைகழங்களில் எப்பொழுது முதல் "அரசியல் அறிவியல்" ஓர் தனிப்பாடமாக்கப்பட்டது? ஏன்?
ஆ) ஒர் அரசை "இயற்கை நிறுவனம்" என்று அரிஸ்டாட்டில் ஏன் கூறுகினார்?
a) When the subject Political Science became a separate study in leading Universities? Why?
b) Why Aristotle said, the State is a natural institution?

32. இயற்கை நிலையில் மனிதன் எப்பொழுதும் போரிட்டு கொண்டிருந்தான் என்று ஏன் தாமஸ் ஹாப்ஸ் கூறினார்?
According to Hobbes, in the State of Nature men were constant war with each other. Why?

33. நடைமுறை இறையாண்மையையும், சட்டப்படியான இறையாண்மையையும் வேறுபாடுத்திக் காட்டவும்?
Differentiate between De-facto Sovereignty with De-jure Sovereignty

34. குடிமை சமத்துவத்தின் அம்சங்களை விவரி? அதன் முக்கியத்துவத்தை விளக்கவும்?
Describe the features of Civil Equality. Explain its importance?

35. நல்ல குடிமகனின் குணங்களை வெளிப்படுத்தவும்?
Bring out the qualities of Good Citizen?

36. நியாயமான சமுதாயத்திற்கு அரசியல் உரிமைகள் ஏன் அவசியம் என்பதை விளக்குக?
Why political rights are necessary for a Fair Society? Explain

37. மாக்கியவல்லி அரசியலையும் மதத்தையும் பிரித்தார். ஏன் ?
Machiavelli separated religion from politics. Why?


38. சமத்துவம், சுதந்திரம் இடையிலான உறைவை வெளிப்படுத்துக.

Bring out the relationship between equality and liberty.


39. பன்மைத்துவத்தின் தேவையை விளக்குக? பன்முக கோட்பாட்டின் நிபுணர்கள் யார்?

Explain the need for Pluralism. Who are the exponents of “Pluralist Theory”?

40. ஒவ்வொரு கேள்விக்கான குறியீட்டிற்கும் அதற்குத் தொடர்புடைய உதாரணத்தைத் தருக.



For each question mark given an example that shows the linkage.



பிரிவு – IV / Section – IV

(7 x 5 = 35 Marks)

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

Answer all the questions.

41. A) அ) "அரசியல் அறிவியல்' படிப்பதன் முக்கியதுவத்தை விளக்குக?
ஆ) அதன் தன்மையைமற்றும் பரப்பெல்லை விவரிக்கவும்?
இ) "அரசியல் இல்லாத வரலாறு பழமில்லாத மரம், வரலாறு இல்லாத அரசியல் வேர் இல்லாத மரம்" என்ற ஜான் சீலேவின் கருத்தினை விளக்குக.

a) Explain the importance of studying Political Science.

b) Describe its Nature and Scope.

c) "History without political science has no fruit, political science without history has no root" – John Seelay: Explain

(or)

B) அ) "அதிகாரம்" என்ற கருத்தாக்கத்தினை விளக்குக.

ஆ) “அரசியல் அறிவியலை“ படிப்பதற்கான நவீன அணுகுமுறைகளை விவாதிக்கவும்?

இ) அவற்றின் தேவை மற்றும் முக்கியதுவத்தை விளக்குக?

a) Define the concept of Power?

b) Discuss the modern approaches to study Political Science.

c) Explain their need and importance.

42. A) பின்வரும் அட்டவணையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி:

தசாப்தம் (பத்து ஆண்டுகள்)	மொத்த மக்கள் தொகை (மில்லியனில்)	ஆண்டு வளர்ச்சி விகிதம்
1901	238.4	--
1911	252.1	0.56
1921	261.3	-0.03
1931	279.0	1.04
1941	318.7	1.33
1951	361.1	1.25
1961	439.1	1.96
1971	548.2	2.20
1981	683.3	2.22
1991	846.4	2.14
2001	1028.7	1.97
2011	1210.7	1.64

1. கடந்த தசாப்தத்தை ஒப்பிடுகையில் வேறு எந்த தசாப்தத்தில் மக்கள் தொகை குறைந்தது?

2. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் எந்தப் பத்தாண்டுகளில் அதிகமாக இருந்தது?

3. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் எந்தப் பத்தாண்டுகளில் மிகவும் குறைவாக இருந்தது?

4. “மக்கள் தொகை கணக்கெடுப்பு” என்பதனை வரையறு. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முக்கியத்துவம் என்ன?

5. 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூன்று முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.

With the help of the box Item answer the following table:

Decade	Total Population (in million)	Annual Growth Rate

1901	238.4	--
1911	252.1	0.56
1921	261.3	-0.03
1931	279.0	1.04
1941	318.7	1.33
1951	361.1	1.25
1961	439.1	1.96
1971	548.2	2.20
1981	683.3	2.22
1991	846.4	2.14
2001	1028.7	1.97
2011	1210.2	1.64

a) In which decade has the population decreased in comparison to the last decade?
b) In which decade is the population growth rate the highest?
c) In which decade the population growth rate the lowest?
d) Define Census. What is the importance of the study of population?
e) Mention any three features of the Census 2011.

(or)

B) அ) சமூகம், அரசு மற்றும் அரசாங்கம் ஆகியவைகளின் பரஸ்பர உறவு பற்றி
விளக்குக?
ஆ) மாக்கியவல்லின் அரசை பற்றிய கருத்தை ஆய்வு செய்யவும்?
இ) அவர் ஏன் அரசிலியிலிருந்து மதத்தை பிரித்தார்?

ஈ) பிளாட்டோவால் முன்மொழியப்பட்ட ஒரு இலட்சிய அரசின் மக்கள்தொகை
என்பது 5040 ஆக இருக்கிறது. ஏன்?

a. Explain the inter-relationship between Society, State and Government?
b. Examine the Machiavelian idea of State.
c. Why he separated religion from politics?
d. Why Plato proposed that the population of ideal state should be 5040?

43. A) அ) இறையாண்மை என்றால் என்ன?
ஆ) அதன் பண்பியல்புகளையும், வகைகளையும் விவரிக்கவும்?
இ) பங்கீட்டு நீதி என்றால் என்ன?

a) What is Sovereignty?
b) Describe its characteristics and types
c) What is the Distributive Justice?

(or)

B) அ) "அதிகார பரவலாக்கம்" என்றால் என்ன?
ஆ) சமத்துவம் என்பதன் பொருள் என்ன? மேலும் அதன் வகைகளை வெளிப்படுத்துக?

இ) சமத்துவம் பற்றிய லாஸ்கியின் கருத்துகளை விவாதிக்கவும்?

a) What is 'Decentralisation'?

b) What do you mean Equality and bring out its types.

c) Discuss the ideas of Laski on Equality.

44. A) அ) அரசு மற்றும் அறநெறியுடனான சட்டத்தின் தொடர்பு எவ்வாறு உள்ளது? சட்டத்தின் வகைபாட்டினை பற்றி விளக்குக?

ஆ) இந்தியாவில் குடியுரிமை பெறக்கூடிய பல்வேறு வழிமுறைகள் யாவை?

a) How law is related to state and morality? Explain the classification of law

b) What are the different ways to acquire citizenship in India?

(or)

B) உரிமைகள் மசோதாவின் சிறப்பம்சங்களை வெளிப்படுத்தவும். அதன் முக்கியதுவத்தை விளக்கவும்?

Bring out the salient features of Bill of Rights. Explain its importance.

45. A) அ) எம்.என். ராயின் உள்ளூர் குடியரசு மற்றும் தீவிர மக்களாட்சி பற்றி ஒரு சிறுகுறிப்பு வரைக.

ஆ) பிரதிநிதித்துவ மக்களாட்சியின் நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்து விவாதிக்கவும்?

a) Write a short on M.N. Roy's local republics and radical democracy?

b) Discuss the merits and demerits of representative democracy

(or)

B) இந்திய மக்களாட்சியின் சாதனைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக. இந்திய மக்களாட்சி சந்திக்கும் சவால்களை பட்டியலிடவும்?

Write an essay on the achievements of Indian democracy. Bring out the challenges against Indian democracy.

46. A) இந்திய அரசாங்கத்தின் அமைவிடங்களை விவாதிக்கவும்







அ) மேற்கண்ட புகைப்படத்தில் உள்ள அமைப்புக்களை அடையாளம் காணமுடிகிறதா?

ஆ) மக்களாட்சி அரசாங்கங்களுக்கு அமைப்புகள் ஏன் இன்றியமையாததாகின்றன?

இ) மக்களாட்சியில் நாடாளுமன்றத்தின் முக்கியத்துவம் யாது?

ஈ) இந்தியாவின் நீதித்துறை உலகிலேயே அதிக அதிகாரம் படைத்தது என எவ்வாறுகூறலாம்?

Discuss where you can situate Indian Form of Government



Based on the photo collage discuss the following questions in the class:

a) Can you identify the institutions given in the Photo collage?
b) Why are institutions essential in democratic governments?
c) What is the significance of the Parliament in a democratic country?
d) How can you say that the Judiciary in India is one of the most powerful in the world?
e) What 'values' are associated with Parliament in a democratic country?

(or)

B) அ) இந்திய அரைகுறை கூட்டாச்சி முறை அரசாங்கத்தினை கொண்டு இருப்பத்திற்கான காரணத்தினை விளக்குக? மேலும் அதன் நன்மைகளை பற்றி கூறு?

ஆ) அதிபர் ஆட்சி முறை அரசாங்கத்தின் தடைகள் மற்றும் பங்களிப்புகளில் பங்கு குறித்து விவாதி.

a) Explain the causes for India following quasi federal form of government. Bring out its advantages.
b) Discuss the role of checks and balances in a presidential form of government

47. A) அ) ஜான் லாக்கினுடைய இயற்கை நிலை மற்றும் சமூக ஒப்பந்தக்

கோட்பாட்டினை பற்றி விரிவாகக் குறிப்பு எழுதுக.

ஆ) 'இளவரசன்' (Prince) என்ற புத்தகத்தில் மாக்கியவல்லி எழுதிய கருத்துகளை

ஆய்வு செய்க?

a) Write a detailed note on John Locke's state of nature and social contract theory?
b) Examine the ideas of Machiavelli on his book 'The Prince'

(or)

B) அ) பிளாட்டோவின் நீதி கருத்துகளைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

ஆ) அரசு பற்றி மார்க்சின் பார்வை பற்றி விவாதி. வர்க்க போராட்டம்

மற்றும் புரட்சி குறித்து விளக்குக?

a) Write short notes on Plato's ideas of Justice?
b) Discuss the Marxian view of State. Explain Class Struggle and Revolution.

******End******